Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 25

வியாழக்கிழமை
21 டிசெம்பர் 2023

மார்கழி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"இன்னும் வெள்ளம் வடியேலை அதுக்குள்ள டெங்கு எண்ட இன்னொரு சிக்கல் வந்திட்டு பாருங்கோ"



## முல்லைத்தீவில் 6,268 பேர் பாதிப்பு

முல்லைத்தீவு, டிசெ.21

சீரற்ற காலநிலை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 113 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 268 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 185 குடும்பங்களைச் சேர்ந்த 541 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக் கப்பட்டுள்ளனர். தற்போது வெள்ளம் வடிந்தோட ஆரம் பித்துள்ள நிலையில் மக்கள் துப்புரவாக்கும் நடவடிக்கை களை ஆரம்பித்துள்ளனர். கிணறுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் குடிதண்ணீரைப் பெறுவதில் சிரமங் களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று பொதுமக்கள் கூறுகின்றனர். அத்துடன் மலசலகூட வசதிகளும் போதா துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-எ-19)

## வவுனியாவில் வான்பாயும் 479 குளங்கள்

வவுனியா, டிசெ.21

கன மழையுடனான காலநிலையால் வவுனியாவில் 479 குளங்கள் வான்பாய்கின்றன. இதுவரை 64 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன.

11

# வடக்கில் டெங்கு; பேரிடர் உருவாகும்?

### கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரம்
### மக்கள் ஒத்துழைப்பைக் கோரும் சுகாதாரத்துறை

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 21**

**வடக்கு மாகாணத்தில் முக்கியமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்குத் தொற்று நிலைமை அபாயக் கட்டத்தை எட்டியுள்ளது. இந்தநிலைமை தொடர்ந்தால் பெரும் உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது என்று சுகாதாரத்துறையினர் எச்சரித்துள்ளனர்.**

11

## யாழில் வெள்ளத்தால் 4,094 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.21

சீரற்ற காலநிலையால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆயி ரத்து 188 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 222 குடும் பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இடம்பெயர்ந்தவர்கள் உறவினர்கள் வீடுகளிலும், முன் பள்ளிகளிலும் தற்காலிகமாகத் தங்கியுள்ளனர் என்று யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப் பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

11



## மாணவருக்கு போதைப்பொருள் கொக்குவிலில் ஆறு பேர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ்ப்பாணம், கொக்குவில் பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் ஆறு பேர் யாழ். மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைபேசியில் 'வட்ஸ் அப்' செயலி மூலம் தொடர்புகளை ஏற்படுத்தி இவர்கள் போதைமாத்திரைகள்

11

## இலங்கைக்கு 250 மில். டொலர்

கொழும்பு, டிசெ.21

உலக வங்கி இலங் கைக்கான தனது கடன் தவணையான 250 மில்லியன் டொலரை விடுவித்துள்ளது. இலங்கை

11

## வரி அதிகரிப்பால் மாற்றம் வரலாம்!

### மஹிந்த எதிர்பார்ப்பு

கொழும்பு, டிசெ.21

வற்வரி அதிகரிப்பு கொள்கை அடுத்த ஆண்டில் பிரதான அரசியல் பேசுபொருளாக அமையும். வரி அதிகரிப்பு பெரும் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரி வித்துள்ளார்.

11

## ஓட்டோக் கட்டணத்தை கட்டுப்படுத்த செயலி

கொழும்பு, டிசெ.21

பயணிகள் போக்குவரத்தில் ஈடு படும் முச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர் முறைமையைக் கட்டாய மாக்குவது தொடர்பாக அரசாங் கம் கவனம் செலுத்தியுள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட வுள்ள செயலி ஊடாக நாடு முழு வதும் ஒரே அளவிலான முச்சக் கர வண்டிக் கட்டணங்களை அற விடுவது தொடர்பாகவும்

11

## 3 நாள்களில் 31 பேர் கைது

முல்லைத்தீவு, டிசெ.21

போதைப்பொருளுடன் தொடர்புடைய குற் றச்சாட்டுகளின் கீழ் முல்லைத்தீவு மாவட் டத்தில் கடந்த மூன்று நாள்களில் மட்டும் ஒரு பெண் உட்பட 31 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். போதைப்பொருள் நுகர்வு, போதைப்பொருள் விற்பனை,

11

## தேர்தல் திட்டங்களுடன் நாடு திரும்பும் பஸில்!

கொழும்பு, டிசெ.21

அமெரிக்கா சென்றுள்ள பஸில் ராஜ பக்ச நாடு திரும்பியதும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர்களுடன் விசேட சந் திப்பொன்றை நடத்தவுள்ளார்.

2024ஆம் ஆண்டு நடைபெற வுள்ள தேர்தல்களை மையப்படுத் தியே இந்தச் சந்திப்பு நடைபெற வுள்ளது என்றும், தேர்தலைச் சந் திப்பதற்கான வியூகங்கள் தொடர் பாக இந்தச் சந்திப்பில்

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோய்த்தாக்கம் யாழில் தீவிரம்
# நிரம்பி வழிகின்றன மருத்துவமனைகள்!

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்ப்பாணத்திலுள்ள பிரதேச அரசினர் மருத்துவமனைகள் மற்றும் யாழ்.போதனா மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளில் வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சை பெற வருவோரின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்துள்ளது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கின் தாக்கம் மற்றும் காய்ச்சல், தடிமன் உள்ளிட்ட நோய்த் தாக்கங்கள் மக்களிடையே அதிகரித்துள்ளன. காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சிகிச்சைபெற வருவோரின் எண்ணிக்கையே உயர்வடைந்துள்ளது.

யாழ்.போதனா மருத்துவமனையில் 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம் இலக்க விடுதிகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. கட்டில்கள் போதாமையால் நோயாளர்கள் தரையிலும் நடைபாதையிலும் இருந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

## தொடர் மழை, தத்தித் தாக்கம்
# 1,500 ஹெக். நெற்செய்கை முல்லைத்தீவில் பாதிப்பு!

**முல்லைத்தீவு, டிசெ. 21**

**முல்லைத்தீவில் பெய்துவரும் கன மழையாலும், தத்தித் தாக்கத்தாலும் ஆயிரத்து 500 ஹெக்ரேயருக்கு மேற்பட்ட நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சிறுதானியப் பயிர்ச்செய்கையும் வெள்ளத்தால் அழிவடைந்துள்ளது.**

முல்லைத்தீவு மாவட்ட விவசாய அபிவிருத்திக்கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் யாமினி சலீலன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொக்குத்தொடுவாய், கொக்குளாய், புளியமுனை, புதுக்குடியிருப்பு போன்ற பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. நிலக்கடலை, உளுந்து, பயறு, மிளகாய் போன்ற பயிர்செய்கைகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனைவிட தற்போது வேகமாகப் பரவிவரும் வெண்முதுகு தத்தித் தாக்கம் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 500 ஹெக்டயர் நிலப்பரப்பில் நெற்செய்கையைப் பாதித்துள்ளது. இது தொடர்பில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையில் விவசாயத் திணைக்களத்தினர் ஈடுபட்டுள்ளனர் - என்றார். (ச-19)

## கடந்த காலங்களைவிட
# முல்லையில் இம்முறை அதிகளவு மழைவீழ்ச்சி

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த காலங்களைவிட இந்த ஆண்டு டிசெம்பர் மாத காலப்பகுதியில் அதிகளவான மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. கிட்டத்தட்ட இரு மடங்கு அதிகரிப்பு இவ்வாறு பதிவாகியுள்ளது.

வவுனிக்குளம் பிரதேசத்தில் 21 ஆயிரத்து 255 மி.மீற்றரும் முத்தையன்கட்டு பிரதேசத்தில் ஆயிரத்து 754 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் கிடைத்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள நடுத்தரக் குளங்களான 20 குளங்கள் நிரம்பி வான்பாய்கின்றன. 390 சிறுகுளங்களிலும் நீர்வரத்து அதிகரித்து வெளியேறி வருகிறது. குளங்கள் வான்பாய்வதால் விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. (ச-19)

## உடுப்பிட்டி மதுபானநிலையம்
# நேரில் ஆராய்ந்து முடிவாம்!

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா அனுமதி வழங்கியதாகக் குறிப்பிடப் படும் உடுப்பிட்டி மதுபான நிலையம் தொடர்பில் உடுப்பிட்டி சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், கரவெட்டிப் பிரதேச செயலர் ஈ.தயாரூபன் ஆகியோரும் சந்திப்பில் பங்கேற்றனர்.

உடுப்பிட்டி, இமையாணன் மேற்குப் பகுதிக்கு நேரடியாக வந்து அங்கு அமைக்கப்பட்டுள்ள மதுபான சாலை தொடர்பாக ஆராய்ந்து உரிய தரப்புகளுடன் பேசி மதுபானசாலையை அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்குரிய உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அமைச்சர் இதன்போது உறுதியளித்துள்ளார்.

அத்துடன் மக்கள் எதிர்ப்புகளிருந்தால் அந்த இடத்தில் மதுபானசாலைக்கு அனுமதியை வழங்கமுடியாதென யாழ்.மாவட்டச் செயலரும் சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் உறுதிபடத் தெரிவித்தார்.

இதேவேளை, கூட்டத்தில் சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் பிரதேச செயலர் மீது பல குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்ததுடன் சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும், பிரதேச செயலருக்கும் இடையில் கடுமையான வாய்த்தர்க்கங்களும் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-66)

# பருத்தித்துறை மருத்துவமனையில் மீண்டும் இலவச ஆணுறைத் திட்டம்

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் இலவச ஆணுறை வழங்கும் திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எய்ட்ஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் தேசிய வேலைத்திட்டத்துக்கு அமைவாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனை வளாகத்தில் பொருத்தப்பட்டிருந்த ஆணுறை வழங்கும் இயந்திரம் அண்மையில் விஷமிகளால் களவாடிச் செல்லப்பட்டிருந்தது. இந்நிலையில் குறித்த இலவச ஆணுறை வழங்கும் திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (ம-100)

## போதனாவில்
# மீண்டும் பாஸ்

யாழ்., டிசெ. 21

யாழ்.போதனா மருத்துவமனைக்கு அதிகரித்த பார்வையாளர்கள் காரணமாக போக்குவரத்து நெரிசல்கள், திருட்டுச் சம்பவங்கள், நோய்த் தொற்றுகள், நோயாளர் பராமரிப்பில் இடையூறுகள் என்பன ஏற்படுவதன் காரணமாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் பார்வையாளர் அனுமதிப்பத்திரம் மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது ஒரு நோயாளருக்கு தலா இரு அனுமதிப்பத்திரம் எனும் அடிப்படையில் நோயாளரை அனுமதிக்கும் பகுதியில் பெற்றுக்கொள்ளமுடியும். சிறப்பான நோய்ப்பராமரிப்பு வழங்குவதனை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் இந்த ஒழுங்குமுறைக்கு அனைத்து பார்வையாளர்களும் ஒத்துழைப்பினை வழங்கும்படி கோரப்பட்டுள்ளது. (ம-125)

# கஞ்சாவுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 21

5.1 கிராம் உயிர்கொல்லி கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை சாவகச்சேரிப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர். சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஒ-125)

# நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் சிவநேசன் அமரத்துவமடைந்த நான்காவது ஆண்டு நினைவு வைபவமும் நினைவுப் பேருரையும் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இன்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக தகைசார்வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் 'தமிழ்ப் பிராமி வழியாக வெளிவரும் இலங்கைத் தமிழரின் புராதன வரலாறு' எனும் தலைப்பில் நிகழ்த்தவுள்ளார். இதில் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீ சற்குணராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம)



# ஜனாதிபதி ரணில் பொதுவேட்பாளர்!
## கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 21

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க பொது வேட்பாளராகக் களமிறங்குவார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரான முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

தேர்தல்களை எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவே உள்ளது. ஏனைய கட்சிகளையும் இணைத்துக்கொண்டு பயணிப்போம். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க கட்சிசார்பற்ற - பொது வேட்பாளராக நிச்சயம் களமிறங்குவார் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்தோரின் முதலீடு இலங்கைக்கு அவசியம்



## சாகல தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ. 21**

**புலம்பெயர் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதால் ஒருவர் இனவாதியாகவோ இலங்கைக்கு எதிரானவராகவோ இருக்கப்போவதில்லை. புலம்பெயர்ந்தவர்களை இந்த நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் இணைத்துக்கொண்டு, அவர்களின் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான சூழலை உருவாக்கவேண்டியது அவசியம் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.**

சாகல மேலும் தெரிவித்ததாவது:-

இன, மத பேதமின்றி வேறு நாடுகளில் வசிக்கும் எந்தவொரு இலங்கையரும் புலம்பெயர்ந்தவர்கள் என்ற வரையறைக்குள் அடங்குவர். கடந்த காலங்களில் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு இடையில் வேறுபாடுகள் தோற்றுவிக்கப்பட்டன.

நாட்டின் அபிவிருத்திக்கு அவர்கள் பங்களிப்புச் செய்ய விரும்புகின்றபோதும், அதிகாரத்துவத் தடைகள் மற்றும் அவர்கள் முகம்கொடுக்கும் சவால்கள் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் முதலீடுகளை நாட்டுக்குள் ஈர்ப்பதற்கு, வெளிப்படைத் தன்மையுடன் கூடிய களமொன்றை அமைக்க வேண்டியுள்ளது- என்றார். (ஒ-44)

# ஜனாதிபதியின் காலைவார ஒருபோதும் அனுமதியேன்

## பிரசன்ன தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 21

நாடு வழமைக்குத் திரும்பியுள்ள இந்தத் தருணத்தில் ஜனாதிபதியின் காலை வாருவதற்கு சிலர் முயற்சித்து வருகின்றனர். அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்று ஆளுங்கட்சி பிரதம கொறடாவும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாடு ஸ்திரமாகிக்கொண்டிருக்கும் போது, நாட்டை மீண்டும் சீர்குலைக்க சிலர் முயற்சிக்கின்றனர். போராட்டத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடியில், நாட்டைப் பொறுப்பேற்க தலைவர் இருக்கவில்லை. சஜித் பிரேமதாஸவையும் சரத் பொன்சேகாவையும் அன்று அழைத்தோம். ஆனால் யாரும் முன்வரவில்லை. அன்று ரணில் விக்கிரமசிங்க மட்டுமே முன்வந்தார்.

நாடு ஒரு வருடத்துக்கு முன்பு எப்படி இருந்தது என்பது எங்களுக்கு நினைவிருக்கிறது. அரசியலுக்கு முன் நாட்டைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். அதன் அடிப்படையில் நாங்கள் உதவுகிறோம்- என்றார். (அ-ம-44)

# சஜித் தலைமையில் புதிய கூட்டணி!

## தயாசிறி, ரொஷானுக்கும் இடம்

கொழும்பு, டிசெ. 21

சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்வரும் ஜனவரியில் அமைக்கப்படவுள்ள அரசியல் கூட்டணியில் நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர மற்றும் ரொஷான் ரணசிங்க உள்ளிட்டோர் இணையவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து அங்கத்துவம் பெறாவிட்டாலும், புதிய கூட்டணியில் இவர்களுக்கு முக்கியமான பொறுப்பு வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-44)

# பூட்டானியர் கொலை; இலங்கையர் கைது!

## ஆஸியில் சம்பவம்

கொழும்பு, டிசெ. 21

பூட்டான் பிரஜை ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டில் இலங்கையர் ஒருவர் அவுஸ்திரேலியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கான்பெராவிலுள்ள மிருகக்காட்சிச்சாலை உணவகத்தில் சமையல்காரராகக் கடமையாற்றிவந்த 29 வயதான ஜூட் விஜயசிங்க என்பவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். அதே உணவகத்தில் கடமையாற்றிய பூட்டான் பிரஜையையே அவர் கத்தியால் குத்தி கொலை செய்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-6)

# 'ஈ-சிம்' முறைமை; டயலொக் அறிமுகம்

**வாடிக்கையாளர்கள் பல்வேறு வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் முகமாக டயலொக் நிறுவனம் இலங்கையில் 'ஈ-சிம்' முறைமையை அறிமுகப்படுத்தவுள்ளது. தற்போது பாவனையிலுள்ள பிளாஸ்ரிக் சிம்முக்குப் பதிலாக இந்த 'ஈ -சிம்' ஏற்படுத்தப்படுகிறது.**

**புதிதாக அறிமுகமாகியுள்ள அன்ட்ரொயிட் வசதியுடைய சகல கைபேசிகளுக்கும் 'ஈ சிம்'மைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் இரட்டை 'ஈ -சிம்' வசதியும் உண்டு.**

**கைபேசி திருடப்பட்டால் எடுத்துச் சென்றவர்களால் சிம்மை அப்புறப்படுத்த முடியாது. கைபேசி சேதமடைந்தால் ஒரு முறை மட்டும் பாவிக்கக்கூடிய கடவுச்சொல் ஊடாகப் புதிய 'ஈ -சிம்' இணைப்பை வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ளமுடியும்.**

**வாடிக்கையாளர்கள் mydialog அல்லது dialog.lk என்ற இணையத்தளங்களினூடாக எந்தெந்த கைபேசிக்கு 'ஈ- சிம்' வசதியைப் பெற்றுக்கொள்ளலாமென பார்வையிடமுடியும் என்றும் டயலொக நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-6)**



# புதினம் தெரியுமோ?

**இடம், பொருள், ஏவல் அறிஞ்சு நடக்கிறதுதான் புத்திசாலித்தனம். சில இடங்களில இப்பிடித்தான் நடக்கவேணும், இப்பிடி நடக்கக்கூடாது எண்டு ரூல்ஸ் இருந்தால் அதைப் பின்பற்றுறதுதான் சரி. அப்பிடி அதைப் பின்பற்ற ஏலாட்டி அந்த இடத்துக்குப் போகாமல் விடோணும்.**

**முந்தநாள் கம்பஸில ஒரு காச்சட்டைப் பிரச்சினை. அங்க நடந்த திரைப்பட விழாவைப் பார்க்கச் சிலர் போயிருக்கினம். அவையில ஒருத்தர் அரைக்காச்சட்டையோட போயிருக்கிறார். ஆனால் கம்பஸுக்க ஆரும் அரைக்காச்சட்டையோட போகக் கூடாது எண்டு சொல்லி கம்பஸ் செக்கியூரிட்டி மறிச்சு திரும்பிப்போகச் சொல்லி இருக்கிறார். ஆனால் இந்த அரைக்காச்சட்டைக் கும்பல் அதுக்கு சம்மதிக்கேலை. 'போனால் அரைக்காச்சட்டையோடதான் போவம். அப்பிடி அரைக்காச்சட்டையோட போகக்கூடாது எண்டு ரூல்ஸ் இருந்தால் அதை எழுத்தில எங்களுக்குக் காட்டு' எண்டு காட்டுக்கத்தல் கத்தியிருக்கினம். இது பத்தாது எண்டு தாங்கள் ஏதோ சுத்தமான சூசைப்பிள்ளையள் எண்ட நினைப்பில நடந்ததையெல்லாம் போனில வீடியோவும் எடுத்திருக்கினம். அப்பிடி வீடியோ எடுக்கக்கூடாது எண்டும் செக்கியூரிட்டிமார் சொல்ல, "எங்கட பாதுகாப்புக்கு எடுக்கிறம்'' எண்டு சொல்லிப்போட்டு, பிறகு அதைக் கொண்டந்து தங்கட பேஸ்புக்கில போட்டு நியாயம் கேட்டிருக்கினம். ஆனால் பேஸ்புக்கிலை அவை தங்களுக்கு நியாயம் கேக்க நினைச்சு, கடைசியா எல்லாரிட்டையும் நல்ல கிழிதான் வாங்கினவை. அதைவிட ஒராளை அவையின்ர அனுமதியில்லாமல் வீடியோ எடுக்கிறதே பிழை. இவை என்னடாவெண்டால், தங்கட பாதுகாப்புக்கு எண்டு சொல்லி, செக்கியூரிட்டிமாரை வீடியோ எடுத்ததுமில்லாமல், அதை பேஸ்புக்கிலையும் போட்டிருக்கினம். ரூல்ஸைப் பற்றிக்கேக்கிறவைக்கு அடிப்படை மனித உரிமைகளைப் பற்றிக்கூடத் தெரியேலை.**

**கம்பஸுக்க காச்சட்டையோடதான் போவமெண்டு வில்லங்கத்துக்கு நிக்கிறவை, நல்லூர்க் கோயிலுக்கு உள்ளையோ இல்லாட்டி தலதா மாளிகைக்கோ காச்சட்டையோட போய்க் காட்டுவினமோ? இல்லாட்டி ஒரு நீதிமன்றதுக்கு உதே காச்சட்டையோட போவினமோ? அந்தந்த இடத்துக்கெண்டு சில கட்டுப்பாடுகள் இருந்தால் அதை மதிச்சுத்தான் நடக்கவேணும். ஏற்கனவே இஞ்ச பண்பாடு, கலாசாரம் எல்லாம் சீரழிஞ்சு கொண்டிருக்கு. அதுக்குள்ள இருக்கிற கொஞ்ச நஞ்சத்தையாவது பேணுற இடங்களைக் கூட இப்பிடியான ஆக்கள் விடமாட்டினம் போல.**

**யாழ்ப்பாணக் கம்பஸில தமிழ்ப் பிள்ளையள் மட்டுமில்ல இப்ப சிங்கள, முஸ்லிம் பிள்ளையளும் தான் கூடப் படிக்கினம். அவையள் கூட இப்பிடி அரைக்காச்சட்டையோட போக அனுமதி இல்லை. புதிசா இப்பிடியான ஆக்கள் அரைக்காச்சட்டையோட போய்க் காட்டினால், பிறகு அவையும் போகக்கூடும். அதுக்காகத்தான் செக்கியூரிட்டிமார் தங்கட கடமையில இறுக்கமா நிண்டிருக்கினம். அதில பிழை இல்லையே. தாங்கள் நடைமுறைக்கு மாறான உடுப்போட போட்டு, பிறகு "எங்களுக்கு நீதி வேணும்" எண்டு பேஸ்புக்கில உருண்டு புரள்றதில எள்ளளவும் நியாயமில்லை கண்டியளோ.**


-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்



**வாக்கியப் பஞ்சாங்கப்படி சனிபகவான் டிசெம்பர் 20 ஆம் திகதி (இன்று) மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். 20.12.2023 முதல் 6.3.2026 வரை கும்பராசியில் சஞ்சரிக்கவுள்ளார்.**




நுண்ணறிவும், பேச்சு சாதுரியமும், எடுத்த வேலையைத் திறமையாக முடிக்கும் வல்லமையும் கொண்ட இடப ராசி அன்பர்களே...

இதுவரை உங்கள் ராசிக்கு 9 இல் அமர்ந்து பலன் தந்த சனிபகவான் தற்போது 10 ஆம் வீட்டில் அடியெடுத்து வைக்கிறார். 9 ஆம் வீட்டில் அமர்ந்திருந்தாலும் சனிபகவான் பல பிரச்சினைகளைக் கொடுத்து மனக் கவலைகளை அதிகரித்துக்கொண்டுதான் இருந்தார். காசும் கையில் தங்காமல் வந்த இடம் தெரியாமல் செலவானது.

சனிபகவான் 20.12.2023 முதல் பத்தாம் வீடான கும்பத்தில் அடியெடுத்துவைக்கிறார். பொதுவாக பத்தாம் வீட்டில் சனி சஞ்சாரம் அத்தனை சாதகமானதல்ல என்றாலும் ரிஷபராசிக்கு யோகபலன்களையே தருவார். காரணம் சனிபகவானே உங்கள் பாக்கிய மற்றும் உத்தியோக ஸ்தானாதிபதி. அதாவது 9, 10 க்கு உரியவர். அவர் 10 வீட்டில் ஆட்சிபெற்று அமர்வது மிக நல்ல பலன்களையே கொடுக்கும்.

ஆரோக்கியம் மேம்படும். மருத்துவச் செலவுகள் குறையும். உங்களைச் சுற்றி இருப்பவர்களில் யார் நல்லவர், யார் கெட்டவர் என்பதை அறிவீர்கள். தொடங்கும் செயல்கள் அனுகூலமாகும். தொட்டது துலங்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும்.

செல்வாக்கு அதிகரிக்கும். சகோதரர்கள் இணக்கமாவார்கள். திருமணம் குழந்தைப் பாக்கியம் போன்ற சுபச்செய்திகள் எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு அவை கிடைக்கும். என்றாலும் செலவுகள் அதிகரிக்கும்.

சனிபகவான் உங்களின் 4ஆம் வீட்டைப் பார்ப்பதால் தாயாரின் உடல் நலனில் அக்கறை செலுத்துங்கள். ரகசியங்களைப் பகிர்ந்துகொள்வதைத் தவிர்ப்பது நல்லது. ஆசைப்பட்ட வண்டி வாகனம் வாங்கும் வாய்ப்பு ஏற்படும்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் வீண் விவாதங்கள் உண்டாகாமல் பார்த்துக்கொள்வது அவசியம். சனிபகவான் 12 ம் வீட்டைப் பார்ப்பதால் தூக்கமின்மை அதிகரிக்கும். சுபச் செலவுகளும் ஏற்பட்ட வண்ணம் இருக்கும். வாய்ப்பு கிடைக்கும்போது ஆன்மிகப் பயணம் சென்று வருவீர்கள்.

**வியாபாரம்:** தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். போட்டியாளர்களைச் சமாளிக்கப் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். வியாபாரத்தில் நௌிவுசுளிவுகளைக் கற்றுக்கொண்டு இலாபம் ஈட்டுவீர்கள்

**உத்தியோகம்:** 10 ம் வீட்டில் சனி வந்தமர்வதால் பதவி உயர்வு உண்டு. என்றாலும் பணிச்சுமை அதிகரிக்கவே செய்யும். திடீர் இடமாற்றம் கலங்க வைத்தாலும் அதனால் சம்பள உயர்வும் சலுகைகளும் கிடைக்க வாய்ப்பு உண்டு.

**மொத்தத்தில் இந்த சனி மாற்றம் உங்கள் திறமைகளை உலகுக்கு எடுத்துச் சொல்லி குன்றின் மேல் இட்ட விளக்காய் ஒளிரச் செய்யும்.**

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் குடும்ப விடயமாக உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். மனதில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கும். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். சங்கடங்கள் நீங்கும். சக வியாபாரிகளிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். நன்மைகளை அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**கடகம்:** திடீர் செலவுகளும் ஏற்பட்டு கையிருப்பைக் குறைக்கும். உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறை வேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். இளைய சகோதரர்களால் உதவியும் உற்சாகமும் உண்டு. மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். கணவன் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல்நலனில் கவனம் தேவை. வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். உறவினர்களால் சில குழப்பங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** அவப்பெயர் நீங்கும். நண்பர்களை தொடர்பு கொண்டு பேசுவீர்கள். தட்சிணாமூர்த்தி வழிபாடு தடைகளைத் தகர்க்கும். முக்கியமான முடிவுகள் சாதகமாகும்,வியாபாரத்தில் மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**மகரம்:** எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். ஆதாயம் கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.



கோப்பாய் வடக்கு, இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் கதை பூர்த்தி வழிபாடுகள் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன. விநாயகருக்கு இலட்சார்ச்சனை இடம்பெற்று சுவாமி வீதியுலா வந்தார். (ச-17)



## குப்பிழான் சிவபூமியில் விநாயக விரதப் பூர்த்தி

யாழ்ப்பாணம், டிசெ. 21

குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் விநாயக விரதப் பூர்த்தி வழிபாடுகள் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன.

இதன்போது 108 மோதகம் மற்றும் கொழுக்கட்டை அவியல் என்பன விநாயகருக்குப் படைக்கப்பட்டு அபிஷேக, பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. தொடர்ந்து பிள்ளையார் பெருங்கதைப் படிப்பும் நடைபெற்றது. (ச-66)



தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய கஜமுகாசூரன் போர் உற்சவம் கடந்த திங்கட்கிழமை அடை மழைக்கு மத்தியிலும் அடியவர்கள் சூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பொலிஸாரும் போதைக்கு எதிரான வேட்டையும்

கடந்த சில நாள்களாக நாடெங்கும் போதைப்பொருளுக்கு எதிரான விசேட நடவடிக்கைகளைப் பொலிஸார் முடுக்கி விட்டுள்ளனர். வடக்கு மாகாணம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் கஞ்சா, ஹெரோய்ன் போன்ற போதைப் பொருள்களை நுகர்வோர், விற்போர் என ஏராளமானோர் இந்த வேட்டையில் சிக்கியுள்ளனர். இப்படியான நடவடிக்கைகள் போதைப்பொருள் வியாபாரிகளுக்கு நிச்சயம் கலக்கத்தைக் கொடுத்திருக்கும். இது வரைக்கும் போதைப்பொருள் தொடர்பான இரகசியத் தகவல்கள் கிடைத்தாலும் கூட அதுபற்றிப் பொலிஸார் பெரிதாக அலட்டிக் கொண்டதில்லை. கண் துடைப்புக்காக ஓரிருவரைக் கைது செய்வார்கள். அவர்கள் கூட பெரும்பாலும் போதைப்பொருளைப் பயன்படுத்துபவர்களாகவோ அல்லது சிறியளவில் விற்பவர்களாகவோதான் இருந்தனர். போதைப்பொருளை நாட்டுக்குள் கடத்திக் கொண்டு வருவதற்காக கூலிக்கு ஆட்களை வைத்து பெரும் வலைப்பின்னலை உருவாக்கி, சமூகத்தை போதைக்குள் தள்ளி, காசு பார்க்கும் சூத்திரதாரிகள் ஒரு போதுமே பொலிஸாரின் கையில் சிக்கியதில்லை. எனவே இந்தக் கண் துடைப்புக்கைதுகள் போதைப்பொருள் சாம்ராஜ்ஜியத்தின் ஒரு துரும்பைக் கூட அசைக்கும் வல்லமையற்றனவாகவே இருந்தன.

இந்த நிலையில் தான் அண்மைய நாள்களாக பொலிஸார் தங்கள் அலட்சியப்போக்கைக் கைவிட்டு, தங்கள் தலைமையின் கட்டளைப்படி போதைக்கு எதிரான களத்தில் சற்றுத் தீவிரமாகக் குதித்திருக்கிறார்கள். இதனையே கடந்த சில நாள்களாக வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகளும் உணர்த்துகின்றன. ஆனால் இப்போதுகூட, போதைப் பொருள் மாபியாக்களின் பிரதான புள்ளிகள் எவரும் சிக்கியதாகத் தகவல்கள் இல்லை. ஓரிரு நாள்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகப் புள்ளி ஒருவரின் மகன் பாரதூரமான போதைப்பொருளுடன் புத்தளத்தில் சிக்கியிருந்தார். பலகோடி ரூபா பெறுமதியான அந்தப் போதைப்பொருள் கடத்தல்காரனிடம் உரிய முறையில் விசாரித்தால், அவர்களது வலைப்பின்னலை அறிந்து, அதனை நிர்மூலமாக்கும் சாத்தியமும் ஏற்பட்டிருக்கும். ஆனால், குறித்த போதைப்பொருள் கடத்தல்காரனை விடுவிக்க சட்டத்தில் என்னென்ன ஓட்டைகள் இருக்கின்றன என்றுதான் பொலிஸார் தேடுகிறார்கள். காரணம், போதைப்பொருள் கடத்தல்காரர்களிடம் கொட்டிக் கிடக்கும் பணம்தான் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

வாலை விட்டுவிட்டு, நூலைப் பிடிக்கின்ற வேலைகள் ஒருபோதும் பயனளிக்கப்போவதில்லை. போதைப் பொருள் என்ற நச்சுமரத்தின் ஆணிவேரை அசைக்கத்தான் பொலிஸாருக்குத் திராணி இல்லையெனில் குறைந்தபட்சம் பக்க வேர்களையாவது வெட்டினால், நாளடைவில் ஓரளவுக்கேனும் போதைப்பொருள் பரவுகையைக் கட்டுக்குள் கொண்டுவரக்கூடியதாக இருக்கும். ஆனால் இந்தப் போதைக்கெதிரான விசேட நடவடிக்கையில் கூட நான்கு கிராம், ஐந்து கிராம் என்று மிகச் சொற்பளவிலான போதைப் பொருளை வைத்திருந்தவர்களைத்தான் பொலிஸாரும், அவர்களின் மோப்பநாய்களும் பாய்ந்து பிடிப்பதாகவே தெரிகின்றது. இந்தப் போதைப்பொருள் எதிர்ப்புநடவடிக்கையைப் பார்க்கும்போது, அடிக்கடி இங்கு நடக்கும் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கைதான் மனக்கண் முன்னால் வந்துவிட்டுப் போகின்றது. டெங்கு நோயை இத்தோடு ஒழிக்கிறோம் என்ற பாணியில் எல்லா வீடுகளுக்கும் செல்வார்கள். அங்கு டெங்கு நுளம்பு உருவாகக்கூடிய அத்தனை ஏதுநிலைகளையும் கண்டறிந்து, அவற்றைச் சீராக்குமாறு வீடுகளின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்துவார்கள். ஆனால் அதன் பின்னர் அந்தச் சீராக்கல் நடைபெற்றதா இல்லையா என்பதைப் பெரும்பாலும் சுகாதாரத் திணைக்களத்தினர் உறுதி செய்வதில்லை. விளைவு? ஒவ்வொரு வருடமும் டெங்கு அதிகரிக்கின்றதே தவிர குறைந்தபாடில்லை. அதேபோலத்தான் போதைக்கு எதிரான பொலிஸாரின் விசேட நடவடிக்கையும் அமைந்துவிடுமோ என்று எண்ணத்தோன்றுகின்றது. மேலிடம் கட்டளையிட்டு விட்டதே என்பதற்காக - கணக்குக் காட்டுவதற்காக - இப்போது போதைப்பொருள் வைத்திருப்போரைத் தேடித் தேடிப் பிடிக்கும் பொலிஸார், அதன் பின்னரும் இதே வேகத்தைக் காட்டினால் மட்டுமே போதைப்பொருள் கலாசாரத்தைக் கட்டுப்படுத்தமுடியும். ஆனால் அது எந்தளவுதூரம் சாத்தியம்?




# இமயமலைப் பிரகடனத்தால் இறையாண்மைக்கு அச்சம்!

## சிங்கள தேசியவாத அமைப்பு எச்சரிக்கை

**கொழும்பு, டிசெ. 21**

**இமயமலைப் பிரகடனத்தால் இலங்கையின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. சிங்கள மக்களை ஏமாற்றும் கபட நோக்கமும் இதன் பின்னணியில் உள்ளது. எனவே, சிங்கள - பௌத்த மக்கள் இது தொடர்பில் விழிப்பாகவே இருக்க வேண்டும் - இவ்வாறு கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் கூட்டணியான தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர மேலும் தெரிவித்ததாவது:
தமிழ்ப் புலம்பெயர் இனவாதிகள் சுரேந்திரன் தலைமையில், பிக்குகள் எனக் கூறப்படும் தரப்பினரையும் இணைத்துக்கொண்டு.
அமைப்பொன்றை உருவாக்கி, இமயமலைப் பிரகடனத்தை வெளியிட்டுள்ளனர். இது மக்களை ஏமாற்றி நாட்டைப்பிரிக்கும் முயற்சியாகும். மேற்படி பிரகடனத்தில் 6 யோசனைகள் உள்ளன. 13க்கு அப்பால் செல்ல வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. இந்தப் பிரகடனம் இறையாண்மைக்கு அச்சுறுத்தலானதாகும். இதன் பின்னணியில் இந்தியாவுக்கான தூதுவர் மிலிந்த மொறகொட செயற்படுகின்றார் என்ற சந்தேகமும் எமக்கு உள்ளது - என்றார். (ம-44)

# தன்பாலுறவை அங்கீகரிக்குக

## அம்பிகா வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 21
தன்பாலுறவை இலங்கை இன்னமும் அங்கீகரிக்கவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.
தனது ருவிற்றர் தளத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.
"தாய்லாந்து ஒரு தேரவாத பௌத்த நாடு. அங்கு தன்பாலுறவு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கையும் ஒரு தேரவாத பௌத்த நாடு. ஆனால் இலங்கை இன்னமும் காலனித்துவ சட்டங்களையே பின்பற்றி வருகிறது. இலங்கையில் தன்பாலுறவுக்காரர்களையும் சம பிரஜைகளாக அங்கீகரிக்கவேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)

# ஜனாதிபதி வேட்பாளராக தம்மிக்கவும் பரிசீலிப்பு

கொழும்பு, டிசெ. 21
பொதுஜன பெரமுனக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவின் பெயரும் பரிசீலிக்கப்பட்டுவருகின்றது என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் நேற்று அறிவித்தார்.
அடுத்த ஜனாதிபதிவேட்பாளர் யார் என்பது தொடர்பில் கட்சி இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை. சிறந்த தலைவரை நிச்சயம் களமிறக்குவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-44)

# தவறான சமிக்ஞைகளைத்தான் தமிழருக்குத் தருகிறார் ரணில்

## மனோ கண்டனம்

உலகத்தமிழர் பேரவை அங்கத்தவர்களை, தடை நீக்கம் செய்து, அழைத்து ஜனாதிபதி ரணில் பேசுவது நல்லதே. ஆனால், அவர் உள்நாட்டில் தமிழருக்குத் தொடர்ந்து தவறான சமிக்ஞைகளையே தருகிறார் என்று மனோ கணேசன்குற்றஞ்சாட்டியுள்ளார் (ம)

## நாளை

22.12.2023
வெள்ளிக்கிழமை
மார்கழி 06
சுபநேரம் : 06.25 - 07.55
ராகுகாலம் : 10.55 - 12.25

## நாளொரு நல்வார்த்தை

எப்பொழுது மற்றவரின்
மகிழ்ச்சியானது உங்களின் சொந்த
மகிழ்ச்சியை விட முக்கியமாகின்றதோ
அதுவே அன்பு.

- ஜாக்சன் பிரவுன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை
# பொது அறிவித்தல் - 2024

**1. படவரைஞராக பதிவு செய்தல்.**

1.1. 2024 ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2024 ஆம் ஆண்டு தை மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்வதற்கும், புதுப்பித்து கொள்வதற்கும், எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**2. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2024**

2.1 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149,150,151 ஆம் உப பிரிவுக்கு அமைவாக இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், பொருள்களை விநியோகிப்போர் 2024ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரத்தைத் தமது பிரிவுக்குட்பட்ட உப அலுவலகங்களில் பெற்று அதனை பூரணப்படுத்தி புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, ஒட்டுசுட்டான், ஒலுமடு உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் உரியகட்டணங்களை 2024.03.31 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுகொள்கின்றேன்.

**3. வீடமைப்பு நகரசீர்திருத்தம் கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்**

3.1 புதுக்குடியிருப்பு பிரதேசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார், அரசசார்பு கட்டங்கள், மதில், மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல் புதுப்பித்தல் வேலைகளை அனுமதி இன்றி செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமென்பதை அறியத்தருகின்றேன்.

3.2. ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டிமுடிக்கபடாத பட்சத்தில் புதுப்பித்தல் வேண்டும்.

3.3. சபையின் அனுமதிபெற்றுக் கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச்சான்றிதழைப் (COC) பெற்றுக் கொள்ளவேண்டும்.

3.4. அனுமதியின்றி கட்டடம் கட்டுவோர் மீது, புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் 2024ஆம் ஆண்டு வர்த்தமானி பிரசுரத்திற்கமைவாக தண்டப்பணம் அறவிடப்படும்.

**4. சூழல் பாதுகாப்பு உரிமம் ( EPL) - 2024**

4.1. மத்திய சுற்றாடல் அதிகாரசபைத் தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் பாதுகாப்புச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, எமக்கு வழங்கப்பட்ட குறிக்கபட்ட அதிகாரங்களின் கீழ், புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் நிர்வாகப் பாதுகாப்பு பிரதேசத்தில் 1533/16 ஆம் இலக்க, 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கபட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக, மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு எமக்கு வழங்கபட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற உரிய நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2024 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடாத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத் தருகின்றோம்.

**5. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

5.1 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) பிரிவிற்கு அமைவான துணைவிதியின் பிரகாரம் இப் பிரதேசசபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கு 31.03.2024 ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுகொள்ளும[illegible] கேட்டுக்கொள்கின்றோம். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விளம்பரங்கள் இல்லாத பெயர்ப்பலகை ஒன்று மட்டும் காட்சிப்படுத்த முடியும். விளம்பரங்களுடனான பெயர்ப்பலகை மற்றும் மேலதிகமாக உள்ள விளம்பரப்பலகைகளுக்குப் பிரதேசசபையின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத விளம்பரப்பலகைகள் பிரதேசசபையால் முன்னறிவித்தலின்றி அகற்றப்படும்.

**6. பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் அண்மித்த பகுதியில் கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி வகைகள் விற்பனையைத் தடைசெய்தல்.**

6.1. புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிகடைகள் அமைந்துள்ள பகுதிகளில் 01கி.மீ வரையான சுற்றாடலில் மரக்கறிகள் கடலுணவுகள், இறைச்சி வகைகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ, வீதியோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாகத் தடைசெய்யபட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சபையால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியதருகின்றோம்.

**7. பொது இடங்களில் கழிவுகளினை இடுதல் தொடர்பான அறிவித்தல்**

7.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவிற்கு அமைவாக புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருள்களை அனுமதியின்றிக் கொண்டுசெல்லல், கொட்டுதல் ஆகியன பொதுசுகாதாரத்தைக் கருத்திற் கொண்டு தடை செய்யபட்டுள்ளது. தவறின் பிரதேசசபை சட்டம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

7.2. சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும், வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுப்பொருள்களைப் இடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தங்களிடம் சேரும் கழிவுப்பொருட்களைக் கொள்கலனில் சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகங்களில் உரியகட்டணத்தைச் செலுத்தி சுற்றாடல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**8. பொது சுகாதாரம் பேணுதல்.**

8.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவிற்கு அமைவாக சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும், பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் பற்றைகளைத் துப்பரவு செய்து சுகாதாரத்தினைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**9. கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல்**

9.1. 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 66 (1) ஆம் பிரிவுக்கு அமைவாக சபை எல்லைக்குள் பொதுப்போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் வகையில் வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலிக் கால்நடைகளை கட்டுப்படுத்தி உரிமையாளர்கள் சரியான முறையில் பராமரித்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் பிரதான வீதியை உள்ளடக்கிய நகர்ப்பகுதிகளில் பகல், இரவு நேரங்களிலும் ஏனைய வீதிகளில் இரவு நேரத்திலும் நடமாடும் கட்டாக்காலி கால்நடைகள் பிரதேசசபையால் பிடிக்கப்பட்டு பிடிகூலி, தண்டப்பணம் அறவிடப்படும் என்பதுடன் செலுத்தத் தவறும் பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படுவதுடன் உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

**10. சபை எல்லைக்குள்.**

10.1. 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 68ஆம் பிரிவுக்கு அமைவாக சபை எல்லைக்குள் கல், ஆற்றுமணல், கிரவல் என்பவற்றுக்கான வழி அனுமதி குறித்த உப அலுவலங்களில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

10.2. சபை எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கான தரிப்பிட அனுமதி குறித்த உபஅலுவலகங்களில் பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.

**11. சடலங்களை தகனம் செய்தல்.**

11.1. சுடுகாடுகள் இடுகாடுகள் சட்டத்திற்கமைய புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் சடலம் தகனம் செய்வதற்காக பிரதேசசபையின் 2024 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைய பிரதேசசபையின் அனுமதி பெற்று மயானக்கட்டணம் செலுத்தியே தகனம் செய்தல் வேண்டும்.

**12. காணிகளை பராமரித்தல்.**

12.1. சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடியிருப்புக்களுக்கு அண்டிய காணிகள் துப்பரவு செய்யாது பராமரிப்பற்று பற்றைக்காடுகளாக காணப்படின் அவற்றினை உரியவர்கள் துப்பரவு செய்தல் வேண்டும். மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**13. ஆதனவரி விதித்து அறவிடல்**

13.1 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (1),(2),(3) பிரிவின் கீழ் புதக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குள் அமைந்துள்ள கோம்பாவில், புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு ஆகிய கிராமங்களில் கட்டமைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் இவ் ஆண்டில் அடைந்துள்ள அபிவிருத்திக்கு ஏற்ப இனங்காணப்பட்டு மதிப்பிடப்பட்ட ஆதனங்களுக்குரிய பெறுமதிக்கு ஏற்ப ஆதனவரியினை 4% ஆக ஆதனவரியினை அறவீடு செய்தல்.

**ச.கிருசாந்தன்,**
**செயலாளர்,**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.**
2023.12.21

# கொடுப்பனவு விநியோகம்

சாவகச்சேரி, டிசெ. 21

தென்மராட்சிப் பிரதேச சமூக பாதுகாப்பு அலகில் இணைந்துள்ள பயனாளிகளுக் கான கொடுப்பனவுகள் அந்தந்த சமுர்த்தி வங்கிகளில் விநியோகிக்கப்பட்டு வருவ தாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சமுர்த்திப் பயனாளிகளின் குடும்பங்களைச்சேர்ந்த மாணவர்களுக் கான 'சிப்தொற' கொடுப்பனவுகளும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (ரி-9)

## மாணவர்களுக்குத் தீங்கான செயற்பாட்டுக்கு இடமில்லை

கொழும்பு, டிசெ. 21

பாடசாலைச் சுற்றாடலில் இருந்து 500 மீற்றர் தூரத்துக்குள் மாணவர்களுக்குத் தீங்கான எந் தவொரு செயற்பாட்டுக்கும் இனி இடமளிக்கப்படாது என்று பதில் பொலிஸ்மா அதி பர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் தவணைக் காகப் பாடசாலைகள் ஆரம்பித் தவுடன் இந்த நடைமுறை பின் பற்றப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-6)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 21

குப்பிழான், சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய வருடாந்தப் பொதுக்கூட்டம் ஆலய முன்மண்டபத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தப் பொதுக்கூட்டத்தில் விநாயகப் பெரு மானின் அடியவர்கள், ஆலயத் தொண்டர் கள், கிராம மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபா லனசபையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ரி-66)

# பாத யாத்திரை

யாழ்ப்பாணம், டிசெ. 21

திருவெம்பாவை விரதகாலப் பகுதியை முன்னிட்டு அகில இலங்கை சைவமகாச பையின் ஏற்பாட்டில் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் நோக்கிய ஆன்மீகப் பாத யாத் திரை மாதகல் சம்பில்துறை சம்புநாத ஈச் சர முன்றிலில் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (ரி-66-125)


## ரயிலுடன் மோதி ஒருவர் காயம்

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கடுகதி ரயிலில் மோதி ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்ப வம் சுன்னாகம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை நடந்துள்ளது.

ரயில் கடவையைக் கடக்க முயன்றபோது, ரயில் மோட்டார் சைக்கிளை மோதியுள் ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த 39 வயதுடைய குடும்பத் தலைவர் தூக்கி வீசப் பட்டுக் காயமடைந்துள்ளார். (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சின்னத்தம்பி தியாகராஜா STR**

மண்ணில் 01.08.1930 — விண்ணில் 21.12.2021

ஸ்தாபகர்: எஸ். ரீ. ஆர் பிலிம்ஸ் STR

- ராஜா சினிமா & ராஜா 2 சினிமா - யாழ்ப்பாணம்
- சரஸ்வதி சினிமா - திருகோணமலை
- சாந்தி சினிமா & சுகந்தி சினிமா - மட்டக்களப்பு
- வசந்தி சினிமா & அமுதா சினிமா - வவுனியா
- STR யாத்திரிகர் மடம் திருக்கேதீஸ்வரம்

"STR" என்கின்ற மூன்றெழுத்து காக்கும் எங்கள் முதலெழுத்து

அன்புகொண்டு எமையாண்ட தந்தைசென்று
ஆண்டிரண்டு அதிவிரைவாய்ப் போனதையா
கண்ணிரண்டும் அண்ணலைத் தேடுதையா

தானிரண்டு கைகளால் எமையணைத்து
வானிருண்டும் ஒளிதரும் சுடரைப்போல்
நாவிரண்டு கன்றுகளைக் காக்கும்பசுவாகி
சிவனென்று அருளும்தியாக ராஜன்நீர்

தேன்திரண்ட தங்கள் வாய்மொழியை
செவியிரண்டும் கேட்டு நாளாகிப்போகுதையா.
சுடரிரண்டும் உலகில் உள்ளவரை
கடவுளரை மறப்போமா இவ்வுலகுள்ளவரை.

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

(cs.27429) (N.1)

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

## கந்தையா மகாதேவா (பத்தர்)



தோற்றம் 23.09.1937

மறைவு 18.12.2023

கொக்குவில் மேற்கு மணியர்பதியை பிறப்பிடமாகவும் சொர்ணவடலி கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகாதேவா (பத்தர்) அவர்கள் 18.12.2023 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா கமலம்மா தம்பதியரின் புதல்வனும், லீலாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி மகாலட்சுமி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, மங்கையற்கரசி, மனோன்மணி, மாசிலாமணி, மாணிக்கவாசகர், மகிழரத்தினம், மகேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும், குமுதினி (கனடா), புலேந்திரன் (நெதர்லாந்து), ரவீந்திரன் (கனடா), செல்வேந்திரன், சாந்தினி, ஞானேந்திரன் (கிராம அலுவலர் - கோப்பாய் பி.செ) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனபாலன், ஜெயராணி, கல்ப்பனா, தர்மபாலா (சிரேஸ்ட நில அளவை அத்தியட்சகர் யாழ். மாவட்டம்), துஸாந்தி (ஆசிரியை, யாழ் / இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2023) வியாழக்கிழமை காலை பூநாறி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**
**077 977 3733**
**071 641 4836**

பூநாறி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(cs .53233) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறுகை அறிவித்தல்
## மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம்.
## தனியார் பாதுகாப்புச் சேவை - 2024

1. மாந்தை கிழக்கு பிரதேசசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் விபரிக்கப்பட்ட சேவைக்காக கேள்வி கோரப்படுகின்றன.
2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர், மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம் தொலைபேசி:- 0212283475 தொலைநகல்: 0212283476** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 21.12.2023 முதல் காலை 09.00 மணியிலிருந்து மாலை 02.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **செயலாளர், மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம்** எனும் இடத்திலிருந்து 21.12.2023ம் திகதியிலிருந்து 04.01.2024 வரை வேலை நாட்களில் **காலை 09.00** மணிக்கும் **மாலை 02.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் **தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைக் குழு, மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம், நட்டாங்கண்டல்** எனும் முகவரிக்கு 04.01.2024 ம் திகதி மாலை 02.00மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரது பிரதி நிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
5. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | ஒப்பந்த காலம் | தேவையான ஆளணி எண்ணிக்கை | | கேள்வி பிணை வைப்பு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | இரவு | பகல் | கேள்வி செல்லுபடியாகும் நாட்கள் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | கேள்வி பிணை தொகை | கேள்வி பிணை செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/44(2)/03/Sec. Ser/2024 | பாதுகாப்பு சேவை | 1 வருடம் | 1 | 1 | 49 நாட்கள் | 22.02.2024 | 10,000.00 | 21.03.2024 |

6. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள் கேள்வி கோரவோ பெறுகைக் குழுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைக் குழு,**
**மாந்தை கிழக்கு பிரதேச சபை,**
**பாண்டியன்குளம்.**
**21.12.2023**

## சந்தையில் மரக்கறிகள் கிடுகிடு விலையுயர்வு!

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன என்று நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

பிரதான மரக்கறி வகைகள் யாவும் கிலோ 400 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றன. தொடர்ந்து பெய்துவரும் மழையால் மரக்கறிப் பயிர்கள் பாதிப்படைந்தமையே இந்த விலையுயர்வுக்குக் காரணமென விவசாயிகள் தெரிவித்தனர்

சந்தையில் கத்தரிக்காய் கிலோ 600 ரூபாவுக்கும், தக்காளி கிலோ 800 ரூபாவுக்கும், பயிற்றங்காய் கிலோ 600 ரூபாவுக்கும், பாகற்காய் கிலோ 600 ரூபாவுக்கும் வெண்டிக்காய் கிலோ 400 ரூபாவுக்கும் பச்சைமிளகாய் கிலோ ஆயிரத்து 600 ரூபாவுக்கும் பெரிய வெங்காயம் கிலோ 480 ரூபாவுக்கும் சின்ன வெங்காயம் கிலோ 400 ரூபாவுக்கும் கீரை ஒரு பிடி 160 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-17)


## தொலைபேசி தவறவிடப்பட்டுள்ளது

கடந்த (05.12.2023) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 - 4.30 இற்கும் இடைப்பட்ட நேரத்தில் யாழ். வேம்படி வீதியில் தொலைபேசி தவறவிடப்பட்டுள்ளது. **(Samsung A10S)** (தொலைபேசியின் முன் படம் சிவன், முருகன்) கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொ.பேசி இல.தொடர்புகொள்ளவும்.

**076 761 0023**

# மரண அறிவித்தல்

# பொன்னையா கயிலைநாதன்



வழக்கம்பரை தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கயிலைநாதன் கடந்த 18.12.2023 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா இராசம்மா தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற பெரியதம்பி பரமாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், ஓய்வுபெற்ற Associate Professor இரத்தினமலர் (யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சீனிவாசகம், பரமானந்தம், பொன்னுத்துரை, சண்முகரட்ணம், இராமநாதன் மற்றும் சரஸ்வதி, விமலாதேவி, கனகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், Dr. சுமங்கலியின் (Australia) பாசமிகு தந்தையும், கோபிதரனின் அன்பு மாமனாரும், அத்விகா, அகரனின் ஆசை அம்மப்பாவும், இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் சத்தியாவின் (சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்) பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (19.12.2023) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அன்னாமலை வீதி,**
**சுதுமலை தெற்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 225 5819**

(cs 53238) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமயமலைப் பிரகடனம் கூட்டு அரசியல் சதி

## சிவில் அமைப்புகள் காட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 21

**திம்புக் கோட்பாடுகளைப் புறமொதுக்கும் யுக்தி அரசியலை முன்னெடுக்கவிளையும், இமயமலைப் பிரகடனத்தின் கபட நோக்கங்களையும், திரிபுகளையும் முற்றாக நிராகரிக்கிறோம் என வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 69 சிவில் அமைப்புகள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் கையொப்பமிட்டு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.**

இந்த அறிக்கையில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிங்கள - பௌத்த மேலாண்மை அடிப்படையிலான அரசுக் கட்டமைப்பு, பண்பாட்டுக் கட்டமைப்பு, அவற்றின் விளைவாக எழுந்த அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி என்பவற்றை அதே தளத்திலிருந்து, அந்தத் தளத்தை அங்கீகரித்து மேற்கொள்ளப்படும் வளைந்து கொடுத்தல் நடவடிக்கைகளினூடாக அணுக முடியாது. மாறாக, மேலாதிக்கக் கருத்தியலாலும் அதன் கருவிகளாலும் அடக்குமுறைக்கு உட்படும் மக்கள் சமூகங்களினது அரசியல் அந்தஸ்தை வரையறுத்து, ஏற்றுக்கொண்டு, அவற்றின் அடிப்படையில் செய்யப்படும் அரசியல் ஏற்பாடுகளின் ஊடாகவே இந்த நெருக்கடிகளுக்கான தீர்வு அணுகப்பட முடியும்.

**திம்புக்கோட்பாடு புறமொதுக்கல்**

உலகத் தமிழர் பேரவை சிறப்பான இலங்கையை நோக்கிய சங்க ஒன்றியம் ஆகிய அமைப்புகள் இணைந்து வெளியிட்ட 'இமயமலைப் பிரகடனம்' வெளிப்படுத்தும் ஒன்று, இரண்டு, மூன்று நான்கு எனும் கூற்றுகள், திம்புக்கோட்பாட்டை முற்றிலும் புறமொதுக்கி, இந்தப் பிரச்சினையைப் புரிந்துணர்வின்மைப் பிரச்சினையாகவும் தனிமனிதக் குழு அடிப்படையிலான மனித உரிமைப் பிரச்சினையாகவும் கோட்பாட்டுச் சிதைப்பினை மேற்கொள்கின்றன. இப்பிரச்சினையை அறநீக்கமும், அரசியல் நீக்கமும் செய்ய விளைகின்றன.

சிங்கள - பௌத்த மேலாதிக்கக் கருத்தியலின் சகிப்பு எல்லைகளுக்குள் குறுக்க முயல்கின்றன. இப் பிரகடனத்தின் ஐந்தாவது கூற்று, சிங்கள-பௌத்த கருத்தியலின் நிறைவேற்று எந்திரமாகிய அரசையும் அதன் வன்முறைக் கருவிகளான முப்படைகளையும் பொறுப்புக்கூறலில் இருந்து விடுவித்து, அரச கட்டமைப்புக்கு வெளியில் உள்ள சில பௌத்த துறவிகள், அமைப்புகள் என்பவற்றை மட்டும் அதனுடன் பிணைக்கிறது. இது மிகவும் பாரதூரமான ஒரு அரசியல் சதியாகும்.

**நிதியீட்டத்தைப் புரிந்துகொள்கின்றோம்**

உலகமயமாக்கப்பட்டுள்ள முதலாளித்துவ நலன்களுக்கு இசைவாக பூகோள அரசியல் ஒழுங்குகள், தேசிய அரசுகளுக்கு உட்பட்ட அரசியல் சமூக பொருளாதார ஒழுங்குகள் என்பவற்றை முன்னிறுத்தி உள்நாட்டுப் பிரச்சினைகளின் தன்மைகளையும், கதையாடல்களையும் மீள கட்டமைப்புச் செய்யும் சர்வதேச அரசியல் அட்டவணைக்கு ஏற்பவே இமயமலைப் பிரகடன முயற்சி நிதியீட்டம் செய்யப்பட்டு அரங்கேற்றப்படுகிறது என்பதை நாம் தெளிவாகப் புரிந்துள்ளோம். உலகெங்கிலும் வாழும், அரசியல் பொருளாதார அடக்குமுறைக்கு உட்படும், நேரடியான அரச வன்முறைக்கு உட்பட்டுவரும், அரசற்ற தேசிய இனங்கள், விளிம்பு நிலை மக்கள் எனப் பல்வேறுபட்ட தரப்பினரை குரலற்றவர்களாக மாற்றும் பெரிய கருத்தியல் மேலாதிக்கத் திட்டங்கள், குறித்து நாம் விழிப்புடன் இருக்கிறோம்.

**மாயவலை**

இந்தப் பூமியின் இருப்பையே கேள்விக்கு உள்ளாக்கும் ஒரு பொருளாதார அரசியல் முறைமையின் அரூபகரங்கள் எம்மைச் சூழ்ந்திருப்பதை நாம் அறிவோம். உலகத் தமிழர் பேரவை சிறப்பான இலங்கையை நோக்கிய சங்கஒன்றியத்தினர் வெளியிட்டுள்ள இமயமலைப் பிரகடனம் இவ்வரூப கரங்கள் பின்னும் மாயவலையின் ஒரு கண்ணிதான் என்பதும் எமக்குத் தெரியும். அவற்றுக்குப் பொருத்தமான வகையில் எதிர்வினையாற்றக்கூடிய பரந்த அரசியல் முன்னணியை தேசிய எல்லைகளுக்கு உட்பட்டும், அதற்கு வெளியேயுள்ள புலம்பெயர் தமிழ்மக்களையும் உள்வாங்கி, தாயகத்தில் வாழும் ஒடுக்கப்படும் மக்கள் உருவாக்குவர் என்பதை வெளிப்படுத்தி நிற்கிறோம் - என்றுள்ளது. (ஒ-110)



# இமயமலைப் பிரகடனம் மிகவும் பயங்கரமானது!

## வீரவன்ஸ கருத்து

கொழும்பு, டிசெ. 21

இமயமலைப் பிரகடனம் பயங்கரமானது என விமர்சித்துள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் சமாதான உடன்படிக்கை தோல்வி அடைந்தது. இதனால் இலங்கையைப் பிரிக்க முடியாமல் போனது. இலங்கையைப் பிரித்திருந்தால், ஈழத்துக்கு அப்பாற்பட்ட பகுதியில்தான் தெற்காசியாவின் காஸா பகுதி அமைந்திருக்கும். பலஸ்தீன மக்களுக்கு இன்று நடப்பதுதான் சிங்கள மக்களுக்கு நடந்திருக்கும். இது தான் உண்மை. தற்போதுகூட புலம்பெயரிகள், சில பிக்குகளைப் பிடித்துக்கொண்டு இமயமலை பிரகடனம் எனும் பயங்கரமான திட்டத்து டன் மீண்டும் வந்துள்ளனர் - என்றார். (ம-44)

**பரிசளிப்பு விழா அழைப்பு - 2023**

**யா/வளலாய் அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, வளலாய்.**

**காலம்:- நாளை (22.12.2023) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணி**

**இடம்:- பாடசாலை வளாகம்**

**பிரதம விருந்தினர்**
**உயர்திரு. திருஞானம் ஜோன் குயின்ரஸ்**
(மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்)

* பல்நோக்கு மணிக்கூட்டு கோபுரம் திறப்ப விழா
* பாடநேர மின்மணி அங்குரார்ப்பண நிகழ்வு
* தண்ணீர் தாங்கி திறப்பு விழா
* தரம் -05 புலமைப்பரிசில் மாணவர் கௌரவிப்பு
* வருடாந்த பாடசாலைப் பரிசளிப்பு விழா
* கலை நிகழ்வுகள்
* இராப்போசன விருந்துபசாரம்

**பாடசாலை சமூகத்தினர், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் யாவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**யா/வளலாய் அமெரிக்கமிஷன் தமிழ் கலவன் பாடசாலை, வளலாய்.**
**பாடசாலை பழைய மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர் சங்கம்.**

(CR 41324) A-1

# யாசகர்கள் நாட்டில் உயர்வு

கொழும்பு, டிசெ. 21

நாட்டில் யாசகர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது என்று ஆய்வில் தெரியவந்துள்ளதாக சமூக சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆய்வு 65 இடங்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, நாடுமுழுவதும் 3 ஆயிரத்து 700 யாசகர்கள் உள்ளனர்.

மேல் மாகாணத்தில் மாத்திரம் ஆயிரத்து 600 யாசகர்கள் உள்ளனர் என்றும் அந்த அறிக்கைத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (ச-இ)

# கிரிபத்கொடவில் துப்பாக்கிச்சூடு!

## நால்வர் கைது

கொழும்பு, டிசெ. 21

கிரிபத்கொடவிலுள்ள விடுதியொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் பெண்ணொருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை அதிகாலை 2 மணியளவில் நடந்துள்ளது.

20 மற்றும் 25 வயதுடைய சந்தேக நபர்களே கைதுசெய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து 5ஆயிரத்து 200 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)

# அறிவோம் தெளிவோம் ஆன்மீகக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 21

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களமும் கனடா சைவசித்தாந்தபீடமும் இணைந்து நடத்தும் 'அறிவோம் தெளிவோம் ஆன்மீக ஐயம் தெளிதல் கருத்தரங்கு' திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அநிருத்தனன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கீரிமலை சிவபூமி யாத்திரிகர் மடத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் மறுநாள் திங்கட்கிழமை ஆகிய இரு நாள்கள் இந்தக் கருத்தரங்கு காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை இடம்பெறவுள்ளது. இதில் கனடா சைவசித்தாந்தபீட மருத்துவர் இ.லம்போதரன் கருத்துரையாற்றவுள்ளார். (ச)

# பெண்கள், சிறுவர் துன்புறுத்தல்: எம்மொழியிலும் அறிவிக்கலாம்




கொழும்பு, டிசெ. 21

பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்கொள்ளும் துன்புறுத்தல்கள் மற்றும் ஒடுக்குமுறைகள் தொடர்பில் அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனவரி 1 முதல் 24 மணி நேரமும் இயங்கும் வகையில் இந்த அவசர தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்படும். இந்த இலக்கத்தினூடாக நாட்டின் எந்த இடத்திலிருந்தும் எந்தவொரு மொழியிலும் தமது பிரச்சினைகளைத் தெரிவிக்க முடியும் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

இம்மாதம் 16 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை

# இந்தியன் செலக்ஷனின்

## நத்தார் மற்றும் புதுவருட ஜவுளிப் பண்டிகை

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலைசிறந்த ஆடைகள்

பட்டுச் சாறிகள்,
கொட்டன் சாறிகள்,
சல்வார்கள், சல்வார் துணிகள், டொப், பாட்டி புறொக், சேட்,
ரீ சேட், சோட்ஸ் மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகள்



## விஷேட விலைக்கழிவு

ரெடிமேட் சல்வார் 750 /=

டொப் 500/=

கையிருப்பு உள்ளவரை மட்டுமே

காலம்: 16.12.2023 முதல் 31 ஆம் திகதி வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 14 . 10 . 1943 |  | 19 . 12 . 2023 |

## திருமதி இராசரத்தினம் மகேஸ்வரி

கோப்பாய் மத்தியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் மகேஸ்வரி அவர்கள் 19.12.2023 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அம்பலவாணர் கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினம் (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், சோமகாந்தன் (மாவட்டச் செயலகம், கிளிநொச்சி), சிவநந்தினி (ஆசிரியர், யா/அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயாரும், வளர்மதி (பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், கிளிநொச்சி), சுதாகரன் (ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும், ஆரபி, சாகித்தியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விநாயகலிங்கம் (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் அன்புச் சகோதரியும், இராஜேஸ்வரி, இராசமனோன்மணி, இராசயோகமலர், ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2023) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 291, ஆனந்தபுரம் மேற்கு,
கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27430) S-1

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை
## புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு

# பொது அறிவித்தல்

புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை காணியை சபைக்கு வழங்கி சந்தையின் வளர்ச்சிக்கு உழைத்த புதுக்குடியிருப்பினை வதிவிடமாக கொண்ட அமரர் திரு. கனகசுந்தரசுவாமி அவர்களது திருவுருவச்சிலையினை சந்தை வளாகத்தில் அமைப்பதற்கான அனுமதியினை பொதுச்சந்தை வியாபாரிகள் கோரியுள்ளனர். எனவே இச்சிலை அமைப்பது தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 29.12.2023 ஆம் திகதிக்கு முன்பதாக எழுத்து மூலமாக தெரிவிக்க இயலும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

செயலாளர்
பிரதேசசபை
புதுக்குடியிருப்பு
21.12.2023

(cr.38363) (2.6)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடை, பல்பொருள் வாணிபக்கடைகள் (நாவாந்துறை), சந்தைகள். சிற்றுண்டிச்சாலை, வாகனப்பாது காப்பு நிலையங்கள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## மீள் கேள்வி,கேள்வி அறிவித்தல் - 2024
## (01.01.2024 - 31.12.2024)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் 01.01.2024 ம் திகதி முதல் 31.12.2024 ம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரை யிடப்பட்ட மீள் கேள்வி. கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,150.00 (வற் வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 21.12.2023-28.12.2023 (மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 29.12.2023 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 29.12.2023 .மு.ப 10.00 மணிக்கு

விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப் படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் **மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று** முகவரியிட்டு 29.12.2023 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

**இறைச்சிக்கடைகள்,கருவாட்டுக்கள் பல்பொருள் வாணிபம், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலை, சந்தைகள் மீள் கேள்விகோரல் - 2024**

| இல | விபரம் | கடை இல | பிணை வைப்பு | ஆரம்ப கேள்வித்தொகை(வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 56,100.00 |
| 2 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,686,000.00 |
| 3 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 657,089.45 |
| 4 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,875,000.00 |
| 5 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 595,000.00 |
| 6 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 275,100.00 |
| 7 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 647,400.00 |
| 8 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 550,000.00 |
| 9 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 551,000.00 |
| 10 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 218,910.61 |
| 11 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 153,921.53 |
| 12 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 136,921.75 |
| 13 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 152,074.47 |
| 14 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | | 10,000.00 | 2,250,000.00 |
| 15 | புங்கன்குளம் உள்ளூர் உற்பத்தியாளர்களது அறிமுகச்சந்தை | | 2,000.00 | 6,910.06 |
| 16 | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை | | 5,000.00 | 317,000.00 |
| 17 | பெரிய கடை மரக்கறிச்சந்தை வாழைப்பழக்கடை வடகிழக்கு மூலையாகவும்,சந்தையின் வைரவர் கோவிலில் வடமேற்கு மூலையாகவும் உள்ள துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் | | 5,000.00 | 250,000.00 |
| 18 | செங்குந்தா சந்தைத் தொகுதியில் மீன்சந்தைக்கு மேல்விளம்பர ஒலிபரப்பு சேவை | | 10,000.00 | 500,000.00 |

**நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல 03 கேள்வி அறிவித்தல்**

| இல | விபரம் | கடை இல | பிணை வைப்பு | ஆரம்ப கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 323,500.00 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் (தொலைபேசி இலக்கம் 0212215978) தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணி வரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆணையாளர்,**
**யாழ் மாநகர் சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் தடுப்பு


## சிறப்புச் சுற்றிவளைப்பு
## 70 பேர் கைதாகினர்!



**யாழ்ப்பாணம், டிசெ. 21**

**யாழ்ப்பாணத்தில் கடந்த 3 தினங்கள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையில் 70 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

யாழ்.மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை அதிகமாகக் காணப்படுவதாக இனங்காணப்பட்ட பிரதேசங்களில் விசேட நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.
அதன்போது, போதைப்பொருள் பாவனையாளர்கள், போதைப்பொருள்களை உடைமையில் வைத்திருந்தார்கள் எனும் குற்றச்சாட்டில், யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலுமாக 70 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அதேவேளை எதிர்வரும் நாள்களிலும் இந்த விசேட நடவடிக்கைகள் தொடரும் எனவும், போதைப்பொருள் வியாபாரிகள் சிலரை அடையாளம் கண்டுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-125)



வவுனியா இளைஞர்கள் தமிழர் பண்பாடுகளையும் கலாசாரத்தையும் பறைசாற்றும் சுவரோவியங்களை வரைந்து வருகின்றனர். (ரி-75)

# வட்டுவாகல் பாலத்தை புனரமைக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, டிசெ. 21
போராலும் ஆழிப்பேரலையாலும் பெரும் அழிவைக் கண்ட வட்டுவாகல் பாலம் தற்போது வெள்ள இடராலும் சேதங்களுக்குள்ளாகி வருவதால் இதனூடாகப் பயணிக்கவே முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக மழை காலங்களில் வட்டுவாகல் பாலத்தை மூடி வெள்ளநீர் பாய்கிறது. இதனால் பல இடங்களில் பாலம் சேதமடைந்துள்ளது.
பாலத்தைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதும் எந்த நடவடிக்கையும் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படவில்லை. தற்போதும் முத்தையன்கட்டுக்குளத்தின் நீர் மற்றும் பிற இடங்களிலிருந்து வரும் நீர் வட்டுவாகல் பாலத்தை மூடிப் பாய்ந்து பெருங்கடலுடன் கலக்கிறது. எனவே வட்டுவாகல் பாலத்தைப் புனரமைப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-13)

# கசிப்புக் காய்ச்சியவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 21
காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வறுத்தலைவிளான் பிரதேசத்தில் கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
காங்கேசன்துறை தலைமைப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினரால் குறித்த பகுதி அதிரடியாக முற்றுகையிட்டு கசிப்பு காய்ச்சல் முறியடிக்கப்பட்டது. (ச-27)

## வடக்கில்...

டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்த சுகாதாரத்துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளபோதும், பொதுமக்களின் ஒத்துழைப்புக் கிடைத்தால் மட்டுமே அது சாத்தியமாகும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
சுகாதாரத்துறை தம்மாலான முழு முயற்சிகளை எடுக்கின்றது. இருப்பினும் பொதுமக்களின் பங்களிப்பு மிக அவசியமாக உள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.
கடந்த காலங்களைவிடவும் இந்த ஆண்டு டெங்குத் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்ந்துள்ளது. கடந்த சில நாள்களின் மட்டும் யாழ்ப்பாணம் மாவட்ட அரச மருத்துவமனைகளில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் டெங்குத் தொற்றுடன் சேர்க்கப்பட்டுள்ளனர்.
தற்போது நிலவும் மழையுடனான காலநிலையால் டெங்குத் தொற்று மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. அதனால் பொதுமக்கள் தங்கள் சுற்றாடலைத் துப்புரவாக வைத்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
குடியிருப்புகள், அலுவலகங்கள், திணைக்களகங்கள் போன்ற இடங்களில் நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருள்களை அகற்றவும், சிரமதானம் மூலம் சுற்றாடலைச் சுத்தப்படுத்தவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
அதேவேளை, தொடர்ச்சியான காய்ச்சல் காணப்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறப்படுவது அவசியம் என்றும் சுகாதாரத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.
நுளம்புக் குடம்பிகள் காணப்படும் நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கும், பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பான முறைப்பாடுகள் இருப்பின் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் அவசரத் தொலைபேசி இலக்கமான 076 179 9901 என்ற தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொள்ள முடியும் என்றும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.
நாடளாவிய ரீதியில் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 80 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் டெங்குத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். 49 பேர் டெங்குத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். வடக்கில் இரு டெங்குத் தொற்று மரணங்கள் ஏற்பட்டுள்ளன. (அ-66-125)

## வான்பாயும்...

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள 456 குளங்களும், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள 17 குளங்களும், மத்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள 6 குளங்களும் வான்பாய்கின்றன என்று மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.
பாலிக்குளம், சின்னசிப்பிகுளம், தேக்கம்குளம், பிரமனாளங்குளம், பறையனாளங்குளம் உட்பட 64 குளங்கள் உடைபெடுத்துள்ள நிலையில், கமநல அபிவிருத்தித் திணைக்களம், இடர் முகாமைத்துவ நிலையம், இராணுவத்தினர், மக்கள் இணைந்து அவற்றைச் சீர் செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-110)

## யாழில்...

சீரற்ற காலநிலையால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆயிரத்து 188 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 94 பேர் பாதிப்படைந்துள்ளனர். இவர்களில் 222 குடும்பங்களைச் சேர்ந்த 784 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். 32 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-எ-125)

## இலங்கைக்கு...

எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.
உலக வங்கி இலங்கைக்கு 500 மில்லியன் டொலர் கடனுதவி வழங்க கடந்த ஜூன் மாதம் ஒப்புதல் அளித்திருந்தது. உலக வங்கியின் முதல் கடன் தவணையான 250 மில்லியன் டொலர் கடந்த ஜூன் மாதம் வழங்கப்பட்டிருந்தது. (அ-எ-இ)

## மாணவருக்கு...

மற்றும் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
யாழ். மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸ் அதிகாரி தெ.மேனன் தலைமையிலான குழுவினர் சந்தேகநபர்களைக் கைது செய்தனர். அவர்களில் இருவரை மூன்று நாள்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றக் கட்டளைப் பெறப்பட்டுள்ளது. அவர்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ள மாணவர்களின் விவரங்கள் பெறப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.
(அ-எ-26-20-27)

## 3 நாள்களில்...

கசிப்பு விற்பனை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்கள் மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை பெறப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை மறுவாழ்வு முகாமுக்கு அனுப்புவதற்கு சட்ட மருத்துவ அதிகாரி பரிந்துரை செய்துள்ளார். (அ-எ-19)

## வரி...

எதிர்வரும் தேர்தல் மூலம் நிலையான அரசாங்கத்தை அமைப்பதே பொதுஜன பெரமுனவின் முதன்மையான கடமை. தற்போது பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றபோதும், தற்போதைய ஜனாதிபதி வேறுபட்ட கொள்கையைப் பின்பற்றும் அரசியல் கட்சி ஒன்றின் தலைவரே என்றும் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## தேர்தல்...

ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
அதேநேரம், தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து சிலர் நீக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக புதியவர்கள் நியமிக்கப்படவுள்ளனர் எனவும் பெரமுனக் கட்சியுடன் இணைந்து செயற்படும் பங்காளிக் கட்சித் தலைவர்களுடனும் கூட்டணி நடவடிக்கை பற்றி ஆலோசனை நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-44)

## ஓட்டோக்...

போக்குவரத்து அமைச்சு ஆலோசித்து வருகின்றது.
முச்சக்கரவண்டிச் சாரதிகள் அதிகளவான கட்டணங்களை அறவிடுகின்றனர் என்று கிடைக்கும் முறைப்பாடுகளை அடுத்தே இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
ஒரு லீற்றர் பெற்றோல் 365 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்போது, முச்சக்கர வண்டிச் சாரதிகள் ஒரு கிலோமீற்றருக்கு 300 ரூபா அறவிடுவது நியாயமற்றது என்றும் போக்குவரத்து அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

# டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடத்தடை!

**வொஷிங்டன், டிசெ. 21**

**2024ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கொலராடோ மாநிலத்தில் போட்டியிடுவதற்கு கொலராடோ உயர் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.**



கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் தோல்வியடைந்ததை அடுத்து அமெரிக்க நாடாளுமன்றம் ட்ரம்பின் ஆதரவாளர்களால் முற்றுகையிடப்பட்டு தாக்கப்பட்டது. இந்த வழக்கு நேற்று விசாரிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் முற்றுகையிட்டுத் தாக்கப்பட்டமையிலும் அமெரிக்கத் தலைநகரில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களிலும் ட்ரம்புக்குத் தொடர்புள்ளமை தெரியவந்ததையடுத்தே கொலராமோ நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித் துள்ளது.

அமெரிக்க அரசியலமைப்பின் 14ஆவது திருத்தத்தின் 3ஆவது பிரிவின் கீழ், ஜனாதிபதி வேட்பாளரொருவர் தகுதி நீக்கம் செய்யப்படுவது இதுவே முதல்தடவையாகும். (ம)


### வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் ஆரம்பிக்கப்படவுள்ள CCTV காட்சியறைக்கு கணக்காளர் - பெண் (கணினி அறிவுடையோர் CCTV தொழில்நுட்பவியலாளர் - ஆண் (பழகவிரும்புபவரும் ஏற்றுக்கொள்ளப்படும்) வயதெல்லை (20 - 30) தேவை.
சுயவிபரக்கோவையை 071 684 3023 Whatsapp இற்கு அனுப்பிவைக்கவும்
(ய.53236) (N.1)


# ட்ரம்பைத் தடைசெய்தால் நானும் விலகுவேன்!

## சகவேட்பாளர் விவேக் ராமசாமி தெரிவிப்பு

வொஷிங்டன், டிசெ. 21

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் கொலராடோ பகுதியில் ட்ரம்ப் போட்டியிடுவதற்குத் தடை விதிக்கப்பட்டால், நானும் போட்டியிடப் போவதில்லை என்று குடியரசுக் கட்சியின் சக வேட்பாளரான விவேக் ராமசாமி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் அடுத்த வருடம் நவம்பர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ளது. தற்போதைய ஜனாதிபதியான ஜோ பைடன், ஜனநாயகக் கட்சியின் சார்பில் மீண்டும் போட்டியிட உள்ளார். அவரை எதிர்த்துப் போட்டியிடும் குடியரசுக் கட்சியின் வேட்பாளர்களில் ஒருவராக ட்ரம்ப், விவேக் ராமசாமி ஆகியோர் உள்ளனர்.

நாடாளுமன்ற முற்றுகை தொடர்பான வழக்கு விசாரணைகளின் அடிப்படையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கொலராடோவில் போட்டியிட ட்ரம்புக்குத் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில், நீதிமன்றத்தில் தீர்ப்பை சட்டவிரோத தீர்ப்பு என்று விவரித்துள்ள விவேக் ராமசாமி, ட்ரம்பின் பெயர் வாக்குச்சீட்டில் இல்லை என்றால் நானும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார். (ம)


# சிறிராம் ஜுவல்லர்ஸ்

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத் தள்ளுபடி



- செய்கூலி சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
- அனைத்து விதமான 22 கரட் தங்க ஆபரணங்களுக்கும் யாழில் எங்கும் இல்லாத விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

Box chain = 167750/=

- அனைத்து ஆபரணங்களும் 22 கரட் என உறுதிப்படுத்தி தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலவரத்தின்படி ஆபரணங்களில் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

இச்சலுகை இம்மாதம் 30ஆம் திகதிவரை மட்டுமே

தொடர்புக்கு: 077 165 1729
077 7730 567
021 222 8334


# மின்சார ஊழியருக்கு கொடுப்பனவுகள் 'கட்



கொழும்பு, டிசெ. 21

இலங்கை மின்சாரசபை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு ஊக்கத்தொகைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை இம்முறை வழங்காதுவிடத் தீர்மானிக்கப்பட்டு ள்ளது.

எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர இதுகுறித்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

அத்துடன் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் 25 வீத சம்பள அதிகரிப்பை நடைமுறைப்படுத்த வேண்டாம் என்றும் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார் என்றும் இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)


# மரண அறிவித்தல்

## சின்னையா சந்திரமோகன்

தோற்றம் 08.02.1961

மறைவு 19.12.2023



சுதுமலை தெற்கு அண்ணாமலை வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னையா சந்திரமோகன் அவர்கள் 19.12.2023 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா திரவியம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற கந்தசாமி சிவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், அன்னலட்சுமி யின் அன்புக்கணவரும், பரமேஸ்வரன், துரைசிங்கம், ஸ்ரீகாந்தன், தேவராஜா நற்குணசிங்கம், அல்லிமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சந்திரஸ்ரீ மற்றும் சந்திரராஜா, இராசமலர், இந்திரா, றஞ்சினி, றெஜினா, றெஜீந்திரன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 27431) S-1



# சபிண்டீகரண அழைப்பு

கடந்த 22.11.2023 புதன்கிழமை இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

## அமரர் பங்கஜவல்லி (குஞ்சு) குணநாதன்



அவர்களின் சபிண்டீகரண நிகழ்வு நாளை (22.12.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் **இராஜவீதி நீர்வேலியில் அமைந்துள்ள பொன் செல்வ மஹால் மண்டபத்தில்** அன்னாரது ஞாபகார்த்தமாக ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் அதனைத்தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் இடம்பெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் சபிண்டீகரண நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**முக்கிய குறிப்பு:**

**எமது இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்போடு வேண்டுகின்றோம்.**

**7 ஆம் கட்டை,
பருத்தித்துறை வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.**

குடும்பத்தினர்
077 896 9998




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org